**அ.வ.எண்.13/2023**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 13/2023 | வா.சா. | : 1 |
| பெயர் | : சரவணன் | த/பெ. | : ஆண்டியப்பன் (எ) ராசு |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : உலுப்பகுடி |
| தேதி | : 01.07.2026 | வயது | : 49/2026 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்

**7ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

2) நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்துக்களான வீடு மற்றும் காலியிடம் ஆகியவை எனது அப்பாவிற்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் ஆனது எனக்கு கடந்த 05.05.2003 தேதியில் ஏற்பட்ட வாய்க்கரால் பாகப்பிரிவினை அடிப்படையில் எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கில் கண்ட 1, 2, 4 முதல் 7 பிரதிவாதிகள் எனது உடன்பிறந்த சகோதர, சகோதரிகள் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி எனது தாயார் என்றால் சரிதான். எனது சகோதர, சகோதரிகளின் திருமணத்தை நான்தான் நல்ல முறையில் செய்து வைத்தேன் என்றால் சரிதான். நான் சிங்கப்பூருக்கு 1999 ஆம் வருடம் சென்றேன் என்றாலும் அங்கு எனக்கு கிடைத்த வருமானம் அனைத்தையும் எனது தந்தைக்கு அனுப்பி வைத்தேன் என்றாலும் சரிதான். அந்த வருமானத்தை வைத்து தான் நானும், எனது தகப்பனாரும் சேர்ந்து சகோதர, சகோதரிகளின் திருமணத்தை நடத்தி வைத்தோம் என்றால் சரிதான். தாவா சொத்தில் ஆரம்பத்தில் வீடு ஆனது குடிசை வீடாக இருந்தது என்றால் சரிதான். எனது வருமானத்தைக் கொண்டு மண் சுவர் வைத்து ஓட்டு வீடாக கட்டப்பட்டது என்றால் சரிதான்.

**அ.வ.எண்.13/2023**

3) நான் 1999 முதல் 2017 ஆம் வருடம் வரை சிங்கப்பூரில் வேலை பார்த்தேன். வழக்கு சொத்துக்களுக்கான வருவாய்துறை ஆவணங்கள் அனைத்தும் எனது தகப்பனாரை பெற்ற பாட்டனார் ஆ.பெரியகருப்பன் பெயரில் இருந்தது என்றால் சரிதான். வழக்கு சொத்தானது அரசு புறம்போக்கு கிடையாது என்றால் சரிதான். வழக்கு சொத்தானது 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், 3ம் பிரதிவாதி வழக்கு சொத்துக்களை 1, 2 பிரதிவாதிகளுக்கு எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றாலும் அது சரியல்ல தவறானது. எனது தகப்பனார் 23.09.2010ம் தேதியில் இறந்துவிட்டார். எனது தகப்பனாரின் இறுதிச் சடங்கை நான் தான் செய்தேன்.1, 2 பிரதிவாதிகள் கடந்த 12.03.2023ம் தேதி தாவா சொத்து சம்பந்தமாக என்னிடம் பிரச்சினை செய்தார்கள் என்றால் சரிதான். தாவா சொத்திலுள்ள வீட்டிற்கு நான் தான் பல ஆண்டுகளாக வீட்டுவரி செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 01.07.2026 கையெழுத்து செய்துள்ளார்.

J Aafreen Begum M.com., L.LM.,
Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.07.01 14:08:00 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.